# 4

# இயேசு, தேவனுடைய குமாரன்

இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரனாக இருக்கின்றார் என்ற சத்தியமே கிறிஸ்தவத்தின் இருதயம் போன்ற மையப் பகுதியாக நிலவுகின்றது. கிறிஸ்துவே நமது மார்க்கத்தின் மையமாக இருக்கின்றார். அவரே நமது விசுவாசத்தின் அஸ்திபாரமாக இருக்கின்றார் *(1 கொரி. 3:11)*, நமது பிரசங்கத்தின் மையக் கருத்தாகவும் இருக்கின்றார் *(அப். 8:35; 1 கொரி. 1:23)*, நமது அறிக்கையின் இலக்காகவும் இருக்கின்றார் *(மத். 10:32)*, மற்றும் நமது நம்பிக்கையின் அடித்தளமும் அவரே *(1 தீமோ. 1:1)*. ஆகையால், அவர் மீது ஒரு பலமான விசுவாசம் மிகவும் முக்கியமாகின்றது *(யோவா. 8:24)*. கிறிஸ்துவின் தெய்வீகத்தை நம்புவதற்கு நமக்கு ஏராளமான நல்ல காரணங்கள் இருக்கின்றன. நம்புவதற்கு ஏராளமான ஆதாரங்கள் இல்லாத எதையும் நாம் நம்பும்படி தேவன் நம்மைக் கேட்பதில்லை *(யோவா. 20:31)*. இந்த ஆதாரம் மிகவும் பலமானது, அநேக நூற்றாண்டுகளில் இது ஆயிரக்கணக்கானவர்களை நம்பும்படியாகச் செய்துள்ளது. இயேசு, தேவனுடைய குமாரன் என்று நம்புவதற்குச் சில காரணங்களை இந்தப்பாடம் உங்களுக்கு முன் வைக்கின்றது. இவைகளைக் கவனமாகப் பரிசோதியுங்கள். நீங்கள் ஏற்கனவே பலமான விசுவாசமுள்ளவர்களாயிருந்தால், அவரது சீஷர்களைப் போலவே, "கர்த்தரே, எனது விசுவாசத்தைப் பெருகப் பண்ணும்" என்று அமைதியாக ஜெபியுங்கள். நீங்கள் சந்தேகங்களினால்

*பாரப்பட்டிருந்தால், மாற். 9:24அ வில், ஊமையான ஒரு ஆவி பிடித்த மகனுடைய தகப்பனைப் போல, "விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும்" என்று ஜெபியுங்கள்.*

## ஏனென்றால் அவர் பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றுகின்றார்

*இயேசுவின் பிறப்புக்கு நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு முன்னதாகக் கூறப்பட்ட தீர்க்கதரிசனங்களைக் கவனியுங்கள். அவருடைய பிறப்பு தீர்க்கதரிசனமாகக் கூறப்பட்டது. ஆபிரகாம், யூதா மற்றும் தாவீது ஆகியோரது வம்சாவழியில் அவர் பிறந்தார் (ஆதி. 12:3/மத். 1:2; ஆதி. 49:10/மத். 1:2, 6). ஆபிரகாமுக்கு அநேக சந்ததியார்கள் இருந்தனர், ஆயினும் குடும்பத்தின் பெயர் கூட தீர்க்கதரிசனத்தில் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டது (எரே. 23:5; ஏசா. 11:1/ மத். 1:6). அவர் கன்னிகையிடத்தில் பிறப்பார் என்பது ஏசா. 7:14ல் முன்னுரைக்கப்பட்டு, மத். 1:18-25ல் நிறைவேறியது. பெத்லகேம் என்ற ஊர் அவர் பிறக்கும் இடமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது (மீகா 5:2). அவரது பிறப்பின்போது அநேக பிள்ளைகள் கொல்லப் படுவார்கள் என்பதும் தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்டது (எரே. 31:15/மத். 2:16-18).*

*அவர் எகிப்துக்குக் கொண்டு செல்லப்படுவது பற்றி தீர்க்கதரிசிகள் முன்னுரைத்தனர் (ஓசி. 11:1/மத். 2:13-15), கலிலேயாவில் அவரது வாழ்வு (ஏசா. 9:1, 2/மத். 4:12-16), மற்றும் எருசலேமில் அவர் ஜெயமுள்ளவராகப் பிரவேசித்தல் (சகரி. 9:9/மத். 21:1-11) ஆகியவையும் முன்னுரைக்கப்பட்டன. அவரது ஊழியமும் முன்னுரைக்கப் பட்டது, அவருக்கு முன்னோடினவராக ஒருவர் போவார் என்றும் தீர்க்கதரிசிகள் சொன்னார்கள் (மல்கி. 3:1; ஏசா. 40:3/மத். 3:1-3). அவரது குணமாக்கும் ஊழியத்தைப் பற்றியும் (ஏசா. 53:4/மத். 8:16, 17), அவர் உவமைகளினால் போதிப்பதைப் பற்றியும் (ஏசா. 6:9, 10/ மத். 13:10-17), புறஜாதியாரின் மத்தியில் அவருடைய ஊழியத்தைப் பற்றியும் (ஏசா. 42:1-4/மத். 12:15-21), அதிகாரிகளால் அவர் புறக்கணிக்கப்படுவது பற்றியும் (சங். 118:22/யோவா. 1:11) அவர்கள் பேசினார்கள்.*

*இயேசுவின் மரணமானது தீர்க்கதரிசனத்தில் மிகவும் விளக்கமாகச் சித்தரிக்கப்பட்டது. அவர் தமது நண்பனால் (சங். 41:9/மத். 26:47-50)*

முப்பது வெள்ளிக் காசுகளுக்காக காட்டிக் கொடுக்கப்படுவது (சகரி. 11:12/மத். 26:14-16) பழைய ஏற்பாட்டில் படம் பிடித்துக் காட்டப் பட்டது. பழங்கால வேதவசனங்களில் அவர் தமது விரோதிகளுக்கு முன்பாக எப்படி நடந்து கொள்ளுவார் என்பதும் (ஏசா. 53:7/மத். 27:12, 14), அவர் எப்படி மரணமடைவார் என்பதும் (சங். 22:16/மத். 27:35அ) மற்றும் அவரது உடையின் பேரில் சீட்டுப் போட்டு பங்கிடப்படும் என்பதும் (சங். 22:18/மத். 27:35ஆ, இ) முன்னுரைக் கப்பட்டது. அவர் மரணமடையும் போது கூறிய வார்த்தைகளும் (சங். 22:1/மத். 27:46), அவரது எலும்புகள் முறிக்கப்படாது என்பதும் (சங். 34:20/யோவா. 19:33), அவருடைய விலா உருவப்படும் என்பதும் (சகரி. 12:10/யோவா. 19:34, 37), அவரது அடக்கமும் (ஏசா. 53:9/மத். 27:57-60), அவரது உயிர்த்தெழுதலும் (சங். 16:10/லூக். 24:1-9; அப். 2:25-32), மற்றும் அவர் பரத்துக்கேறுதலும்கூட (சங். 68:18/லூக். 24:50-53) முன்னுரைக்கப்பட்டது.

ஒரு மீட்பர் அல்லது இரட்சகர் வருவார் என்று கூறுவது தீர்க்கதரிசிகளுக்கு ஒப்பீட்டளவில் மிகவும் சுலபமாய் இருந் திருக்கலாம். ஆயினும், அவர்கள் முன்னூறுக்கும் மேற்பட்ட குறிப் பிட்ட விபரங்களை சேர்த்துக் கொடுத்திருப்பதைப் பார்க்கும்போது, இது மறுக்க முடியாத ஒரு வடிவமைப்பாகக் கட்டப்பட்டிருப்பது உறுதியாகின்றது.

இந்தத் தீர்க்கதரிசனங்கள் எல்லாம் நிறைவேறின என்பது எதை அர்த்தப்படுத்துகிறதென்று யோசித்துப் பாருங்கள், மனிதனுடைய முன்னறிவும் ஞானமும் அடுத்த இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் நடக்கப் போவதைப் பற்றிக் கூட முழு நிச்சயத்துடன் ஆழ்ந்தறிந்து கூற முடியாததாய் இருக்கின்றது. அரசியல் தலைவர்கள், நாடு முழுவதும் பரவியுள்ள தங்கள் முகவர்களைப் பயன்படுத்தி, சில சமயங்களில் தேர்தல் முடிவுகளை முன்னதாகவே கணிக்க முடிகின்றது! இயேசுவைப் பற்றிய இந்த தீர்க்கதரிசனங்களோ, இன்றிலிருந்து நானூறு வருடங்களுக்குப் பிறகு தலைவராகப் போகின்ற ஒருவருடைய பிறப்பிடம், அவரது வம்சாவழி, அவரது பள்ளிப் பருவம், அவரது ஆட்சிக் கால அளவு, மற்றும் அவர் இறக்கப் போகும் இடம் மற்றும் விதம் ஆகியவை பற்றி முன்னுரைத்தல் போன்றதாக இருக்கின்றது.

உண்மையான தீர்க்கதரிசனத்தைச் சோதித்துப் பார்க்க முடியும், ஏனென்றால் அது எதிர்கால நிகழ்ச்சிகளை வெளிப்படுத்துகின்றது. அது

*தற்செயலாக நடக்க முடியாத நிகழ்ச்சிகளைக் கொண்டதாயிருக் கின்றது. ஒரு தீர்க்கதரிசனமானது, வரலாற்றுப் பூர்வமாக நிறைவேறும் பொழுதுதான் அதன் சரியான தன்மை காணப்படுகின்றது. ஒரு தீர்க்கதரிசனம் நிறைவேறுதலைத் தவிர, எழுதப்பட்ட அல்லது பேசப்பட்ட வேறு எந்த ஆதாரமும் இந்த விவாதத்தை உறுதிப்படுத்த முடியாது. இயேசு தெய்வீகமானவர் என்பதை இது ஒருபுறம் நிரூபிக்கின்றது, மறுபுறத்தில் இந்த தீர்க்கதரிசனங்களை எழுதிய மனிதர்கள் எல்லாரும் ஏவப்பட்டே எழுதினர் என்பதையும் இது நிரூபிக்கின்றது.*

## ஏனென்றால் அவரது தெய்வீகத்தின் உரிமைகோருதல், அவரது ஊழியங்களுடன் ஒத்திசைந்துள்ளது

*இயேசு தம்மைப் பற்றி தைரியமாகவே உரிமை கோரினார். ஆபிரகாமுக்கு முன்பே தாம் இருப்பதாக அவர் கூறினார் (யோவா. 8:58), உலகம் உண்டாவதற்கு முன்பே தாம் தேவனோடு இருந்ததாக அவர் கூறினார் (யோவா. 17:5, 24), தாம் வானத்திலிருந்து இறங்கி வந்ததாகவும் அவர் கூறினார் (யோவா. 6:38, 62), வானத்திலும் பூமியிலும் தாம் சகல அதிகாரமும் பெற்றிருப்பதாகவும் அவர் கூறினார் (மத். 28:18). அவர், முன்பிருந்த ஒரு மனிதரின் மறுபிறவியல்ல; மாறாக, அவர் மனித உருவில் பூமிக்கு வந்த தேவன் ஆவார் (யோவா. 1:1-18). அவரது தெய்வீகத்தை மறுப்பவர்கள் பலரும் அவரை வெறுமனே ஒரு "நல்ல" மனிதர் மட்டுமே என்று சொல்லுகின்றனர். ஆயினும் அவர் தாம் உரிமை கோரியதன்படியானவர் இல்லை யென்றால் அவர் ஒரு பொய்யராகவும், எத்தராகவும் அல்லவா இருப்பார்-நிச்சயமாகவே அவர் "நல்ல" மனிதராகக் கூட இருக்க முடியாதே!*

*அவருடைய உரிமைகோரல்கள் உண்மை என்பதை அவரது ஊழியங்கள் காண்பிக்கின்றன. இயேசு அநேக அற்புதங்களைச் செய்தார். வேதாகம வரலாற்று ஆசிரியர்கள் அவரது அற்புத ஊழியங் களுக்குச் சாட்சி கொடுத்திருக்கின்றார்கள் (மத். 11:4, 5; யோவா. 20:30, 31). உலக வரலாற்று ஆசிரியர்கள் கூட அவர் அற்புதங்களைச் செய்தார் என்று சாட்சி கொடுத்திருக்கின்றார்கள்.*

*அவரது ஊழியங்களும் அவரது வார்த்தைகளும் ஒன்றாயிருந்தன.*

*“நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்” (யோவா. 8:12அ) என்று அவர் கூறினார்; பிறகு அவர் ஒரு பார்வையற்றவரை வெளிச்சத்தைக் காணும்படி செய்தார் (யோவா. 9:6, 7). “ஜீவ அப்பம் நானே” என்று அவர் கூறினார் (யோவா. 6:35அ), ஐந்து அப்பங்கள் இரண்டு மீன் களைக் கொண்டு ஐயாயிரம் மனிதர்களுக்கு அவர் உணவு கொடுத்தார் (யோவா. 6:10, 11). “நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்” என்று அவர் கூறினார் (யோவா. 11:25அ); பிறகு அவர் மரித்தோரி லிருந்து லாசருவை உயிரோடு எழுப்பினார் (யோவா. 11:43, 44).*

## ஏனென்றால் அவர் பாவமில்லாத வாழ்க்கை நடத்தினார்

*இயேசுவை அறிந்தவர்கள், அவர் பாவமில்லாத வாழ்க்கை வாழ்ந்ததாகச் சொல்லுகின்றனர். இந்த மனிதர்கள் தேவனால் ஏவப் பட்டவர்களாயிருந்தனர்!*

> *நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல் எல்லாவிதத்திலும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார் (எபி. 4:15).*
>
> *அவர் பாவஞ் செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை (1 பேதுரு 2:22).*

*அவருடைய வாழ்க்கையைக் கற்றறிந்தவர்கள் அவரை நல்லவர் என்று கருதியிருக்கின்றார்கள் (லூக். 18:18). அவரிடத்தில் குற்றம் கண்டு பிடிக்கத் தொடர்ந்து முயற்சி செய்து கொண்டிருந்த அவருடைய விரோதிகளும் கூட அவரது நற்பண்பை அறிந்திருந்தார்கள். அவர் அசாதாரணமான ஒரு செயலைச் செய்தார் - அவரைப் பரிசோதித்துப் பார்த்து அவரிடத்தில் பாவம் எதையாவது கண்டு பிடிக்க முடியுமா என்று அவரே அறைகூவல் விடுத்தார் (யோவா. 8:46அ).*

*அவருடைய மரணத்தின் போது கூட அவரது நற்பண்புகள் ஒப்புக் கொள்ளப்பட்டது. பிலாத்துவின் மனைவியுடைய மதிப்புரையை கவனியுங்கள் (மத். 27:19), பிலாத்துவின் மதிப்புரையை கவனியுங்கள் (மத். 27:23), ஏரோதின் மதிப்புரையை கவனியுங்கள் (லூக். 23:14), சிலுவையிலறையப்பட்ட கள்ளனின் மதிப்புரையை கவனியுங்கள்*

*(லூக். 23:41), நூற்றுக்கு அதிபதியின் மதிப்புரையை கவனியுங்கள் (மத். 27:54) மற்றும் யூதாஸின் மதிப்புரையையும் கூட கவனியுங்கள் (மத். 27:4).*

## ஏனென்றால் உலகின் மேல் அவரது வாழ்வு தொடர்ந்து விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றது.

*அநேக நினைவுச் சின்னங்கள் அவரது வாழ்வைக் கனப்படுத்து கின்றன: கர்த்தருடைய நாள் (வெளி. 1:10), கர்த்தருடைய பந்தி (1 கொரி. 11:20-29; மத். 26:26-28), ஞானஸ்நானம் (ரோமர் 6:3-5), மற்றும் நமது நாட்காட்டிகளில் தேதியைக் கணக்கிடும் முறையும் கூட (கி.மு. மற்றும் கி.பி.) எந்த வித கேள்விக்கும் இடமில்லாத வகையில் அவர் உலகத்தின் மாபெரும் மனிதராவார்-மாபெரும் தன்மை என்று மனிதர் குறிப்பிடும் எல்லா தன்மைகளும் கொண்டவராயிருக்கின்றார். அவருக்கு பெரிய பாரம்பரியமோ, முறையான கல்வியோ (யோவா. 7:15), சொத்துக்களோ, அரசியல் அல்லது இராணுவ பலமோ மற்றும் விளையாட்டுத் திறமையோ இவை எதுவும் இருந்ததில்லை; ஆனாலும் கூட, கடந்த இருபது நூற்றாண்டுகளாக மனித குலத்தில் அவர் பெற்றிருக்கின்ற செல்வாக்கைப்பற்றி யார் ஒருவரும் கேள்வியெழுப்ப மாட்டார்கள். அவர் வெறும் மனிதராக மட்டும் இருந்தால், இவ்வுலகமானது அவரை விடப் பெரியவர் ஒருவரை இன்று உருவாக்கியிருக்க முடியாதா? அப்படிச் செய்வதற்கு உதவியாக இரண்டாயிரம் வருடங்களின் முன்னேற்றங்கள் இவ்வுலகில் இருக்கின்றனவே! கற்றலில் உள்ள நமது முன்னேற்றங்களுக்கு மத்தியில், இந்த உலகமானது உண்மையான தலைமைத்துவத்தை எதிர்பார்த்து தவிக்கின்றது. ஒவ்வொருவரும் இயேசு கிறிஸ்துவை நோக்க முடியும்; அவரே வழியாக இருக்கின்றார். எல்லா மனிதருக்கும் அவர் எல்லாமுமாக இருந்திருக்கின்றார், இருக்கின்றார். "அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப் பிரபு என்னப்படும்" (ஏசா. 9:6ஆ).*

## முடிவுரை

*உறுதியாகவே, இயேசு, தேவனுடைய குமாரனாக இருக்கின்றார். அவர் தேவனுடைய குமாரனாக இருக்கின்றார் என்று நம்புவதற்கு, இந்தக் காரணங்களை மறுபடியும் பரிசோதித்துப் பாருங்கள். அவர்*

*இருக்கின்றார் என்று நம்புங்கள், அவர் மூலமாக உங்கள் வாழ்க்கையை தேவனுக்கு அர்ப்பணம் செய்யுங்கள்.*

## பாட வினாக்கள்

*(விடைகள் 306 ம் பக்கங்களில்)*

1. *கிறிஸ்தவத்தின் இருதயம் போன்ற மையப் பகுதியில் இருக்கின்ற சத்தியம் என்ன?*
2. *இயேசுவின் பிறப்பு, வாழ்வு மற்றும் மரணம் ஆகியவை மாபெரும் விபரங்களுடன் தீர்க்கதரிசனமாகக் கூறப்பட்டன. ஒரு சில எடுத்துக்காட்டுகளைக் கொடுக்கவும்.*
3. *இயேசுவைப்பற்றிய தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றம் எதை நிரூபிக்கின்றது?*
4. *இயேசு தம்மைப் பற்றி தைரியமாக, மிகச் சிறந்த வகையில் பல உரிமை கோரல்களைக் கூறினார். அவைகளில் சில யாவை?*
5. *இயேசுவின் ஊழியங்கள் எவ்விதத்தில் அவரது வார்த்தைகளுடன் ஒத்திசைந்திருந்தன?*
6. *இயேசுவின் நற்பண்பு எப்படி ஒப்புக் கொள்ளப்பட்டது என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.*
7. *இயேசுவின் வாழ்க்கை எவ்விதத்தில் நமது உலகத்தில் தொடர்ந்து விளைவு ஏற்படுத்துகின்றது?*

## வார்த்தை உதவிகள்

***பரத்துக்கேறுதல்*** *- மேலே செல்லுதல், மேலே தூக்கப்படுதல், கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த பிறகு, மறுபடியும் தேவனோடிருக்கும்படியாக மேலே எடுத்துக் கொள்ளப்பட்ட நிகழ்ச்சியே பரத்துக்கேறுதல் ஆகும்.*

***தேவப்பண்பு*** *- தேவன்; தேவனுடைய இயல்பு; தேவனாக இருத்தல்.*

***வம்சாவழி*** *- முன்னோர்களின் பட்டியல். இயேசுவின் வம்சா வழியானது (மத். 1:1-16) அவர் தேவனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவரைப் பற்றிய தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாக இருந்தார் என்பதைக் காண்பித்தது.*

***கர்த்தருடைய நாள்*** *- புதிய ஏற்பாட்டின் சபையாரால் வாரத்தின்*

*முதல் நாள் (ஞாயிற்றுக் கிழமை) என்பது ஆராதனைக்கென்று ஒதுக்கி வைக்கப்பட்டது (அப். 20:7).*

***கர்த்தருடைய பந்தி*** *- புளிப்பில்லாத அப்பத்தை உண்டு திராட்ச இரசத்தைக் குடிக்கும்படி இயேசுவால் ஏற்படுத்தப்பட்ட நினைவுச் சின்னமாகும் (1 கொரி. 11:20, 23-26ஐக் காணவும்). புதிய ஏற்பாட்டின் சபையார் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் இதைக் கடைப்பிடிக்கின்றார்கள்.*

***உயிர்த்தெழுதல்*** *- இறந்து போன நபர் மறுபடியும் உயிர் வாழ்க்கைக்குத் திரும்ப எழுதல், (இயேசுவின்) உயிர்த்தெழுதலானது மரணத்தின்மேல் இயேசு அதிகாரம் உடையவராயிருப்பதற்கு நிரூபணமாகும், மற்றும் அவரின் மேல் விசுவாசம் கொண்டு, அவரைப் பின்பற்றும் யாவரும் இந்த பூமியில் அவர்களின் வாழ்க்கை முடிந்த பிறகு, பரலோகத்தில் அவரோடே கூட என்றென்றும் வாழ முடியும்.*